# நடப்பு நிகழ்வுகள்- மார்ச் 04 - 2018

- தேசிய பாதுகாப்பு தினம் (National Safety Day) - மார்ச் - 04

- வியட்நாம் அதிபர் குயாங் அவரது மனைவி ஹியாங் ஆகியோர் மூன்று நாட்கள் அரசு முறை பயணமாக இந்தியா வந்துள்ளனர். இந்தியா வியட்நாம் இடையே பாதுகாப்பு உள்ளிட்ட துறைகளில் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் (03-03-18) கையெழுத்தாகியுள்ளது.

- மண்டல் கமிஷன் அறிக்கையின் அடிப்படையில் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் உள்ள மீனவர்களை, தாழ்த்தப்பட்டோர் பட்டியலில் சேர்ப்பது தொடர்பாக தேசிய தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் ஆணையம் பரிசீலிக்க வேண்டும் என சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

- ‘அமா கான், அமா விகாஸ்’ (Ama Gaon Ama Vikas) “எங்கள் கிராமம் எங்கள் வளர்ச்சி” என்று பெயரிடப்பட்ட திட்டத்தை ஒடிசா முதல்வர் நவீன் பட்நாயக் தொடங்கிவைத்தார்.

- தமிழக சட்டப்பேரவை தலைவராக இருந்த பூபதியின் பதவிக்காலம் முடிவடைந்ததை அடுத்து புதிய செயலராக சீனிவாசன் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

- ஐ.என்.எஸ்.வி தாரிணி (INSV Tarini) கப்பல் 2.03.2018 அன்று தென்னாப்பிரிக்காவின் கேப்டவுன் நகரை அடைந்தது. முழுவதும் பெண் மாலுமிகளுடன், உலகைச்சுற்றிவரும் தனது முதலாவது பயணத்தை மேற்கொண்டுள்ள இக்கப்பலுக்கு லெப்டினன்ட் கமாண்டர் வர்டிகா ஜோஷி தலைமையேற்றுள்ளார். லெப்டினன்ட் கமாண்டர்கள் பிரதிபா ஜம்வால், பி சுவாதி மற்றும் லெப்டினன்ட்கள் எஸ் விஜயாதேவி, பி ஐஸ்வர்யா, பாயல் குப்தா ஆகியோர் இக்கப்பலின் இதர மாலுமிகளாவர். 2017 செப்டம்பர் 10-ம்தேதி கோவா கடற்கரையிலிருந்து ஐ என் எஸ் வி தாரிணி பாய்மரப்படகை பாதுகாப்புத்துறை அமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

- பாமாயில் இறக்குமதி வரியை மத்திய அரசு உயர்த்தியுள்ளது. இதன் படி, கச்சா பாமாயில் (crude palm oil) எண்ணைக்கான இறக்குமதி வரி 30% திலிருந்து 44 சதவீதமாகவும், சுத்திகரிக்கப்பட்ட பாமாயிலின் (refined palm oil) இறக்குமதி வரியானது 40% திலிருந்து 54 % ஆகவும் உயர்த்தப்பட்டுள்ளது.

- அதிக எண்ணிக்கையில் பணக்காரர்களைக் (Highest Number Of Billionaires)கொண்ட நாடுகளின் பட்டியலில் ( Hurun Global Rich List 2018) இந்தியா மூன்றாவது இடத்தைப் பெற்றுள்ளது. முதலிடத்தை சீனாவும், இரண்டாமிடத்தை அமெரிக்காவும் பெற்றுள்ளன. முதல் ஐந்து பணக்காரர்கள் விவரம்,

  1.ஜெஃப் பெஷோஸ் (Jeff Bezos) - அமேசான்

  2.வாரன் பப்பட் (Warren Buffet) - Berkshire Hathaway

  3.பில் கேட்ஸ் - மைக்ரோ சாப்ட்

  4. மார்க் சக்கர்பர்க் - ஃபேஸ்புக்

  5. பெர்னார்ட் அர்னால்ட் (Bernard Arnault) – LVMH

- வானிலை நிலவரங்களை துல்லியமாக முன்கூட்டியே கண்டறியும் வகையில் அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சி மையம் NASA, மேம்படுத்தப்பட்ட கோயஸ்-எஸ் (GOES-S) செயற்கைகோள் அட்லஸ் -5 (ATLAS 5) ராக்கெட் மூலம் கேப் கேனவரல் என்ற இடத்திலிருந்து ஏவப்பட்டது.

- திரிபுரா, நாகலாந்து, மேகாலயா ஆகிய வடகிழக்கு மாநிலங்களில் நடைபெற்ற சட்டமன்ற தேர்தலின் வாக்கு எண்ணிக்கை 03.03.18 அன்று நடைபெற்றது. திரிபுரா – பாரதிய ஜனதா கட்சி, நாகலாந்து – நாகா மக்கள் முன்னனி + பாரதிய ஜனதா கட்சி, மேகாலயா – தேசிய மக்கள் கட்சி வெற்றிபெற்றுள்ளது.

- குடியரசுத் தலைவர், துணை குடியரசுத் தலைவர், மாநில கவர்னர்கள் மற்றும் அவர்களது செயலர்கள் மற்றும் வெளியுறவுத்துறை அமைச்சகத்தால் பயன்படுத்தப்படும் அனைத்து வாகனங்களிலும் பதிவு எண்கள் இருக்கவேண்டும் என்று சாலைபோக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

- அமெரிக்காவிலுல்ள 'டெக்சாஸ் கேன்சர் நோய் தடுப்பு மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்திடமிருந்து (Cancer Prevention & Research Institute of Texas (CPRIT).) கேன்சர் ஆராய்ச்சிக்காக, 1 மில்லியன் டாலர் உதவித்தொகையை அமெரிக்க வாழ் இந்தியர் நவின் வரதராஜன் (Navin Vardarajan) பெற்றுள்ளார்.